பாடம் 7

# 7. கடவுளால் போசித்துப் பராமரிக்கப்படல்

கடவுள் தாம் படைத்த மக்களை அன்று தொடக்கம் இன்றுவரை பராமரித்து வருகிறார். இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து பாலைநிலங்களுக்கூடாக அவர்களைப் போசித்துப் பராமரித்து வழிநடத்தினார், பின்னர் கடவுளின் மைந்தனாக இவ்வுலகில் வந்த ஆண்டவர் இயேசு, மக்கள் நிறைவான வாழ்வைப் பெறும்பொருட்டு தம் முழு வாழ்வையுமே அர்ப்பணித்தார்.

**வாசிப்போம்**

விடுதலைப்பயணம் 16: 4-35

இஸ்ரயேலர் இறைவனால் பிரித்தெடுக்கப்பட்ட மக்களாக இருந்தபோதிலும் 400 ஆண்டுகள் எகிப்தியரால் அடிமைகளாக்கப்பட்டனர். அங்கிருந்து இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மோசேயின் தலைமைத்துவத்தின் கீழ் விடுதலைப்பயணத்தை ஆரம்பித்தனர், 40 வருடங்கள் பாலைநிலத்திற்கூடாகப் பிரயாணம் செய்தபோது மிக அற்புதமான முறையில் இறை பராமரிப்பைப் பெற்றனர். வனாந்தரத்தில் உணவு, நீர், என்பன இல்லாதிருந்தபோது, மக்களின் துன்பங்களை அறிந்து, ‘மன்னா’ என்னும் அப்பத்தையும், இறைச்சிக்காக காடைகளையும் கொடுத்து அவர்களின் தேவைகளை நிறைவுசெய்தார்.

# இறைவன் தந்த மன்னா

"நீ அவர்களிடம், மாலையில் நீங்கள் இறைச்சியை உண்ணலாம். காலையில் அப்பம் உண்டு நிறைவடையலாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்பதை இதனால் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என்று சொல்" விடுதலைப் பயணம் 16:12

"மாலையில் காடைகள் பறந்துவந்து கூடாரங்களை மூடிக்கொண்டன. காலையில் பனிப்படலம் கூடாரத்தைச் சுற்றிப் படிந்திருந்தது, பனிப்படலம் மறைந்தபோது பாலைநிலப்பரப்பின் மேல் மென்மையான தட்டையான, மெல்லிய உறைபனிபோன்ற சிறிய பொருள் காணப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் ஒருவரையொருவர் நோக்கி, 'மன்னா' என்றனர்; ஏனெனில் அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அப்போது மோசே அவர்களை நோக்கி, "ஆண்டவர் உங்களுக்கு உணவாகத் தந்த அப்பம் இதுவே," என்றார், விடுதலைப் பயணம் 16:13-15

அது கொத்துமல்லி போன்ற வடிவில் வெண்ணிறமாயும், தேன் கலந்து ஆக்கிய பணிகாரம் போன்று சுவையாகவும் இருந்தது. இஸ்ரயேலர் 40 ஆண்டுகளாக மன்னா உண்டனர். சபத் என்னும் ஓய்வுநாளுக்கு முன்னைய தினத்தில் இரண்டு மடங்கு சேர்த்துவைக்கும்படி பணிக்கப்பட்டனர். மோசேக்கு கடவுள் கட்டளையிட்டபடி, அவரது சகோதரன் ஆரோன் அதனை உடன்படிக்கைப் பேழையில் பாதுகாப்பாக வைத்தார்.





## பாறையிலிருந்து தண்ணீர்

விடுதலைப்பயணம் 17: 1-6



சீன் என்ற பாலைநிலத்திலிருந்து இஸ்ரயேல் மக்கள் இரபிதிம் என்ற இடத்திற்கு வந்து தங்கினர். அங்கு அவர்களுக்கு குடிநீர் இருக்கவில்லை. எனவே அவர்கள் மோசேயை நோக்கி, "நீர் எகிப்திலிருந்து எங்களை வெளியேறச் செய்தது எங்களையும், எங்கள் பிள்ளைகளையும் கால்நடைகளையும் தாகத்தால் சாகடிக்கவா?" என்று கேட்டனர். மோசேக்கு கடவுள் கட்டளையிட்டபடியே, அவர் தனது கோலால் ஓரேபில் உள்ள பாறையில் அடித்தபோது, அதிலிருந்து நீர் புறப்பட்டது. அதனால் அவ்விடம் மாசா என்றும் மெரிபா என்றும் அழைக்கப்பட்டது. இதற்கான காரணம், இஸ்ரயேல் மக்கள் வாதாடி, ஆண்டவர் தம்மோடு இருக்கிறாரா என்று சோதித்தபடியால் ஆகும்.

கடவுளின் பராமரிப்பை தம் தேசத்தின் வாழ்வில் அனுபவித்த தாவீது அரசன் ஒரு புகழ்ப்பாவின் மூலம் அதனை வெளிப்படுத்தினார்.

**திருப்பாடல் 23: 1-3**

"ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை. பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்.அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார், தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார்."



தொடர்ந்தும், பல நூற்றாண்டுகளுக்குப் பின், இஸ்ரயேலர் வழித்தோன்றலில் இறைமகன் இயேசு மானிடனாக இவ்வுலக மக்களைப் பராமரிக்க வந்தார். அவர், **"நான், ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்."** என்றார். அதற்காகத் தன்னை அர்ப்பணித்தார். பசியுற்றோர், நோயாளிகள், மனமுறிவுற்றோர், ஒடுக்கப்பட்டோர் போன்றோர் மீது பரிவுகொண்டு, அவர்களின் தேவைகளை நிறைவுசெய்தார். மனிதனின் முழுமையான வாழ்வை நோக்கமாகக் கொண்டு, அவர்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்காக தம்மை முழுமையாக அர்ப்பணம் செய்தார். அவரின் போதனைகளும், அற்புதங்களும், செயற்பாடுகளும் மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகுத்தன.

**லூக்கா 6:18, 19**

" அவர் சொல்வதைக் கேட்கவும், தங்கள் பிணிகள் நீங்கி நலமடையவும் அவர்கள் வந்திருந்தார்கள். தீய ஆவியால் தொல்லைக்கு உள்ளானவர்கள் குணமனார்கள்."

ஆண்டவர் இயேசு இன்று முழு உலகின் மீட்பராக உலக மக்களின் தேவைகளைச் சந்தித்தார். அவரை நம்பி வாழ்வோரின் முழு வாழ்வையும் வளமடையச் செய்வதோடு, தம் மக்களும் நற்பண்புகளைக் கற்று, பிறர் நலனுக்காகக் செயல்பட அறைகூவல் விடுக்கிறார்

### செயன்முறை

1. இஸ்ரயேல் மக்களுக்கு மன்னா ஆகாரமாக வழங்கப்பட்டது. எனினும் இதனை மக்கள் முறையாகத் தன்னலமின்றி அனுபவிக்கும்படி, ஆண்டவர் விதித்த வழிமுறைகளை திருவிவிலியத்திலிருந்து பார்த்து எழுதவும்.

2. இடம்பெயர்ந்த மக்கள் எவ்வாறு போசிக்கப்படுகின்றனர் என்பதனை, குழுவாகச் சேர்ந்து ஆராய்ந்து ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கவும்.